Ours bank with
Bank of Baroda

மதுரை மணி
Madurai Mani Tamil Evening Daily
தினசரி தமிழ் நாளிதழ்
ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

New College House
(A Heritage Hotel)
College House

மதுரை பதிப்பு | *மணி 54 | * ஓசை 29 | உள்ளூர் - 29.01.2026 | வியாழன் | விலை ரூ.3/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com
Madurai Edition | *Vol 54 | * Issue 29 | வெளியூர் - 30.01.2026 | வெள்ளி | Price Rs. 3/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com

தசாங்க யோகத்தால் இவர்களுக்கு நன்மைகள்!

இந்திய இராணுவத்தில் 380 காலியிடங்கள்

அதிர்ச்சி அளித்த தங்கம் விலை!

கூட்டணியை இறுதி செய்த தே.மு.தி.க..!

# நாட்டின் வளர்ச்சிக்கு எம்பிக்கள் பாடுபடணும்: பார்லி வளாகத்தில் மோடி பேட்டி!



புதுடில்லி , ஜன. 29–

எதிர்பார்ப்புகளை எம்பிக்கள் பூர்த்தி செய்ய வேண்டும் . நாட்டின் வளர்ச்சிக்கு எம்பிக்கள் பாடுபட வேண்டும் என பிரதமர் மோடி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பார்லிமென்ட் வளாகத்தில் பிரதமர் மோடி நிருபர்களுக்கு அளித்த பேட்டி:–

இந்தியாவின் வளர்ச்சியை மனதில் வைத்து எம்பிக்கள் செயல்பட வேண்டும் . நாட்டின் வளர்ச்சிக்கு எம்பிக்கள் பாடுபட வேண்டும் . மக்களின் குரலுக்கு மதிப்பளிக்கும் விதமாக பார்லிமென்ட் திகழ வேண்டும் . எதிர்பார்ப்புகளை எம்பிக்கள் பூர்த்தி செய்ய வேண்டும்

ஆக்கப்பூர்வமான விவாதத்திற்கு எப்போதும் மத்திய அரசு தயாராகவே இருக்கிறது

பார்லிமென்ட் எம்பிக்கள் ஜனாதிபதியின் அறிவுறுத்தல்களுக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும்

ஜனாதிபதியின் உரை நூற்று நாற்பது கோடி மக்களின் தன்னம்பிக்கையை பிரதிபலிக்கும் வகையில் இருந்தது.

ஐரோப்பிய யூனியன் உடனான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் புதிய தொடக்கத்தை ஏற்படுத்தி உள்ளது . இந்த ஒப்பந்தம் இளைஞர்களின் எதிர்காலத்திற்கு நன்மை பயக்கும்

விவசாயிகள் , இளைஞர்கள் , மீனவர்கள் இந்த ஒப்பந்தத்தால் பயன் அடைவார்கள்

நீண்ட கால பிரச்னை என்ற நிலை மாறி நீண்ட கால தீர்வு என்ற நிலையை எட்டி இருக்கிறோம்

, ஒன்பதாவது முறையாக பட்ஜெட்டை தாக்கல் செய்யும் முதல் பெண் அமைச்சர் நிர்மலா சீதாராமன்

பல்வேறு சீர்த்திருத்தங்கள் மேற்கொண்டு நீண்ட கால வளர்ச்சிக்கு வழி வகுக்கிறோம். இவ்வாறு பிரதமர் மோடி கூறினார் .



கும்பகோணத்தில் நடைபெறவுள்ள இந்திய யூனியன் முஸ்லிம் லீக்கின் மஹல்லா ஜமாஅத் ஒருங்கிணைப்பு மாநில மாநாட்டில் கலந்து கொள்வதற்காக வருகை தந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு பெருந்திரளான பொதுமக்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

# அரசு மரியாதையுடன் அஜித் பவார் உடல் தகனம்; அமித் ஷா உள்ளிட்டோர் இறுதி அஞ்சலி!

மும்பை, ஜன. 29–

விமான விபத்தில் உயிரிழுந்த மஹாராஷ்டிரா துணை முதல்வர் அஜித் பவாரின் உடல், அரசியல் தலைவர்கள், தொண்டர்களின் இறுதி அஞ்சலிக்குப் பிறகு தகனம் செய்யப்பட்டது.

மஹாராஷ்டிரா துணை முதல்வர் அஜித் பவார் உள்ளிட்ட 5 பேர் சென்ற விமானம் தரையிறங்கும் போது ஏற்பட்ட விபத்தில் சிக்கியது. இதில், விமானத்தில் ஏற்பட்ட தீவிபத்தில் 5 பேரும் உடல் கருகி உயிரிழந்தனர். மோசமான வானிலையே இந்த விபத்துக்கு காரணம் என்று கூறப்பட்டுள்ளது.

இதையடுத்து, ஐந்து பேரின் உடல்களும் அஹில்யாபாய் ஹோல்கர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டது. மருத்துவ பரிசோதனைக்குப் பிறகு, இறுதி சடங்கு செய்வதற்காக அஜித் பவாரின் உடல் மருத்துவ மனையில் இருந்து காட்டேவாடியில் உள்ள அவரது இல்லத்திற்கு கொண்டு செல்லப்பட்டது.

அங்கு மனைவி சுனேத்ரா பவார், மகன்கள் பார்த் மற்றும் ஜெய் ஆகியோர் முன்னிலையில் அஜித் பவாரின் உடலுக்கு அரசு மரியாதை செலுத்தப்பட்டது. பின்னர், தேசிய கொடி சுற்றப்பட்ட நிலையில், பாராமதியில் உள்ள வித்யா பிரதிஸ்டான் மைதானத்திற்கு அஜித் பவாரின் உடல் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது.

தொடர்ந்து, அரசியல் தலைவர்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் மத்திய அமைச்சர் அமித் ஷா, கலந்து கொண்டு மலர் வளையம் வைத்து இறுதி மரியாதை செலுத்தினார். அதேபோல, சித்தப்பாவும், தேசியவாத காங்கிரஸ் கட்சியின் தலைவருமான சரத் பவார், மத்திய அமைச்சர் நிதின் கட்கரி, மஹாராஷ்டிரா முதல்வர் தேவேந்திர பட்னவிஸ், துணை முதல்வர் ஏக்நாத் ஷிண்டே, கோவா முதல்வர் பிரமோத் சாவந்த் உள்ளிட்டோரும் பங்கேற்று அஞ்சலி செலுத்தினர். ஆயிரக்கணக்கான தொண்டர்கள், பொதுமக்கள் திரண்டு அஞ்சலி செலுத்தினர். அதன்பிறகு, அஜித் பவாரின் உடல் தகனம் செய்யப்பட்டது. அஜித் பவாரின் மறைவையொட்டி, மஹாராஷ்டிரா அரசு சார்பில் 3 நாள் துக்கம் அனுசரிக்கப்பட்டு வருகிறது.



## மாபெரும் சவால்?

# வரலாற்றுச் சரிவில் இந்திய ரூபாய்! டாலருக்கு நிகரான மதிப்பு

## ரூ.92–ஐ நெருங்கியது!



அமெரிக்கா, ஜன. 29–

அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு, முன்னெப்போதும் இல்லாத வகையில் இன்று வரலாறு காணாத சரிவைச் சந்தித்து 91.96 என்ற நிலையை எட்டியுள்ளது.

2026–ம் ஆண்டின் தொடக்கத்திலிருந்து மட்டும் இந்திய ரூபாய் தனது மதிப்பில் சுமார் 2 சதவீதம் சரிவைச் சந்தித்துள்ளது. குறிப்பாக, அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் இந்தியப் பொருட்கள் மீது விதித்துள்ள கடுமையான இறக்குமதி வரி காரணமாக, ரூபாய் மதிப்பு கடந்த சில மாதங்களில் மட்டும் சுமார் 5 சதவீதம் வரை குறைந்துள்ளது.

இந்தியா கடந்த செப்டம்பர் காலாண்டில் 8.2 சதவீத வலுவான பொருளாதார வளர்ச்சியைப் பதிவு செய்திருந்தாலும், சர்வதேச சூழல்கள் ரூபாய்க்குச் சாதகமாக அமையவில்லை.

இந்தத் திடீர் சரிவுக்குப் பல காரணங்கள் முன்வைக்கப்படுகின்றன. அந்நிய முதலீடுகள் வெளியேற்றம், சந்தையில் நிலவும் நிச்சயமற்ற தன்மை மற்றும் இறக்குமதியாளர்கள் மத்தியில் அதிகரித்துள்ள டாலருக்கான தேவை ஆகியவை ரூபாயைத் தொடர்ந்து பலவீனப்படுத்தி வருகின்றன.

இன்று ( 29.01.2026)காலை வர்த்தகம் தொடங்குவதற்கு முன்பே, ரிசர்வ் வங்கி சந்தையில் தலையிட்டு ரூபாயின் வீழ்ச்சியைத் தடுக்க முயற்சிகளை மேற்கொண்டது. இருப்பினும், டாலரின் ஆதிக்கம் மற்றும் சர்வதேச வர்த்தகப் போர்ச் சூழல் காரணமாக ரூபாயின் மதிப்பு தொடர்ந்து சரிந்து ரூ.91.96 என்ற நிலையில் உள்ளது. தற்போது யூரோ மற்றும் சீனாவின் யுவான் ஆகியவற்றுக்கு நிகராகவும் இந்திய ரூபாய் சுமார் 7.5 சதவீதம் சரிவைக் கண்டுள்ளது. கோல்ட்மேன் சாக்ஸ் போன்ற நிதி நிறுவனங்களின் கணிப்புப்படி, அடுத்த 12 மாதங்களில் ரூபாய் மதிப்பு மேலும் சரிந்து 94 என்ற நிலையை எட்டக்கூடும் என எச்சரிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலை நீடித்தால், பெட்ரோல், டீசல் மற்றும் இறக்குமதி செய்யப்படும் எலக்ட்ரானிக் பொருட்களின் விலை மேலும் உயர வாய்ப்புள்ளது. பொருளாதார வளர்ச்சியைத் தக்கவைத்தாலும், சர்வதேச வர்த்தக வரி விதிப்புகள் இந்திய ரூபாய்க்குப் மாபெரும் சவாலாக உருவெடுத்துள்ளதாக நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

# ஜவுளி நிறுவனங்கள் அதிநவீன இயந்திரங்கள் கொள்முதல் செய்ய 20% மானியம் - மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

கோவை, ஜன. 29–

கோவை கொடிசியா வளாகத்தில் நடைபெற்ற சர்வதேச ஜவுளித்தொழில் மாநாட்டை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சென்னையில் இருந்து காணொலி காட்சி வாயிலாக தொடங்கி வைத்தார். அப்போது அவர் கூறியதாவது:

* ஜவுளி நிறுவனங்கள் அதிநவீன இயந்திரங்கள் கொள்முதல் செய்ய 20 சதவீதம் மானியம் வழங்கப்படும்.
* ஜவுளி நிறுவனங்களுக்கு மானியம் வழங்க ஆண்டுதோறும் ரூ.30 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.
* ஜவுளி தொழிலை மேம்படுத்த தி.மு.க. அரசு தொடர்ந்து நடவடிக்கை எடுத்து வருகிறது. இவ்வாறு அவர் கூறினார்.







தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கோயம்புத்தூர் கொடிசியா வளாகத்தில் நடைபெற்ற முதலாவது சர்வதேச ஜவுளி தொழில் மாநாட்டில் விசைத்தறிகள் நவீனப்படுத்தும் திட்டத்தின் கீழ் 12 விசைத்தறியாளர்களுக்கு மானியமாக மொத்தம் 67.49 இலட்சம் ரூபாய்க்கான காசோலைகளை வழங்கினார். இந்நிகழ்வில் கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர். காந்தி, சட்டமன்ற உறுப்பினர் வி. செந்தில்பாலாஜி, மாநகராட்சி மேயர் கா. ரங்கநாயகி ராமச்சந்திரன், கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை செயலாளர் வே. அமுதவல்லி, துணி நூல் துறை ஆணையர் லலிதா, கோ–ஆப்ட்டெக்ஸ் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் கவிதா ராமு, கைத்தறித் துறை இயக்குநர் மகேஸ்வரி ரவிக்குமார், மாவட்ட ஆட்சித் தலைவர் பவன்குமார் க.கிரியப்பனவர், இந்திய தொழில் கூட்டமைப்பு தலைவர் ஏ.ஆர். உன்னிகிருஷ்ணன், கிராசிம் இண்டஸ்ட்ரீஸ் நிறுவனத்தின் மூத்த தலைவர் சூரஜ் பைர்வானி, டுஆறு நிறுவனத்தின் தலைவர் (ம) மேலாண்மை இயக்குநர் சஞ்சய் ஜெயவர்த்தனவேலு, சந்திரா நிறுவனக் குழுமத்தின் மேலாண்மை இயக்குநர் முனைவர் நந்தினி ரங்கசாமி, தென்னிந்திய ஜவுளி ஆலைகள் சங்கத்தின் தலைவர் துரை பழனிசாமி, ஆயத்த ஆடை ஏற்றுமதி மேம்பாட்டு கவுன்சில் தலைவர் ஏ.சக்திவேல், சிஐஐ டெக்ஸ்டைல்ஸ் பேனலின் கன்வீனர்கள் ஜி.ஆர்.கோபிகுமார். கே.வேல்கிருஷ்ணா ஆகியோர் உடனிருந்தனர்.

தலையங்கம்

மதுரை மணி

வியாழக்கிழமை 29.01.2026

விசுவாவசு தமிழ் வருடம்

தை மாதம் 15-ம் தேதி

# பட்ஜெட் 2026: சீனாவை மிஞ்ச இந்திய உற்பத்தி துறைக்கு என்ன டெஸ்ட்?




உலகத்தின் தொழிற்சாலையாக சீனா மட்டும் தான் இருக்கணுமா? அந்த சிம்மாசனத்தை இந்தியா எட்டிப் பிடிக்கிற நேரம் வந்தாச்சுனு நம்ம எல்லாரும் நம்பிக்கிட்டு இருக்கிறோம். இந்த சூழலில் பிப்ரவரி 1–ம் தேதி தாக்கல் செய்யப்பட இருக்கும் மத்திய பட்ஜெட் 2026ல், எந்த மாதிரியான அறிவிப்புகள் எல்லாம் உற்பத்தி துறைக்கு இருக்க போகிறது என்ற எதிர்பார்ப்பு எழுந்துள்ளது. மேக் இன் இந்தியா மூலமாக இந்தியா கொடுத்த கம்–பேக் இப்போ ஒரு முக்கியமான கட்டத்தில் இருக்கிறது. ஒரு பக்கம் மின்னணு பொருட்கள் மற்றும் செமிகண்டக்டர் துறையில், நாம உலகையே திரும்பி பார்க்க வச்சாலும், இன்னொரு பக்கம் சீனாவுடைய ஆதிக்கம் ஒரு நிழல் மாதிரி நமக்கு பின்னாடியே வந்துட்டு இருக்கு. ஏன் இது ஒரு அல்டிமேட் டெஸ்ட்? வெறும் அசெம்பிளி மட்டும் பண்ணுனா பத்தாது, இந்தியாவிலேயே உதிரிபாகங்களையும் தயாரிக்கணும்ங்கிறது தான் இப்போதைய சவால். பி.எல்.ஐ திட்டத்தில் புது புது செக்டார்கள் வருமா? எம்.எஸ்.எம்.இ (MSME) நிறுவனங்களுக்கு கடன் சுமை குறையுமா? எல்லாவற்றுக்கும் மேல், சீனப் பொருட்களோட விலைப் போட்டியை நாம எப்படி சமாளிக்கப் போறோம்?

நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் கையில இருக்கிற அந்த சிவப்புப் பை, இந்தியாவை ஒரு குளோபல் மேனுபேக்சரிங் ஹப்–ஆ மாத்துமா இல்லையா? பொறுத்திருந்து பார்க்கலாம்.

**பல சவால்கள்?**

பாலிவுட் படங்களில் ஒரு ஹீரோவின் கதை எப்படி இருக்குமோ, அதே போன்ற ஒரு சுவாரஸ்யமான திருப்பத்தை இந்திய உற்பத்தி துறை சந்தித்து வருகிறது. ஒரு காலத்தில் ஓரங்கட்டப்பட்டது, பிறகு ஒரு சிறிய இடைவெளி, இப்போது ஒரு வலிமையான நோக்கத்தோடு அதிரடி மீள்வருகை. பல ஆண்டுகளாக சேவை துறையின் நிழலில் மறைந்திருந்த உற்பத்தித் துறை, 2020–ல் மோடி 2.0 அரசாங்கம் கொண்டு வந்த உற்பத்தியுடன் கூடிய ஊக்கத்தொகை (PLI) திட்டம் மூலம் தனது பயணத்தை தொடங்கியது. ஆனால் அந்த சமயத்தில் கொரோனா பெருந்தொற்று பெரும் சவாலை ஏற்படுத்தியது. அதைத் தொடர்ந்து அமெரிக்காவின் புதிய இறக்குமதி வரிகள் மற்றும் உலகளாவிய விநியோகச் சங்கிலி மாற்றங்கள் எனப் பல சவால்கள் இப்போது குறுக்கே வந்து நிற்கின்றன. இந்த சூழலில் தான் நிர்மலா சீதாராமனின் 2026 பட்ஜெட் தான், இந்த இந்திய தொழிற்சாலைகளின் கதை ஹிட் ஆகுமா அல்லது இடைவேளைக்கு முன்பே முடிந்துவிடுமா என்பதைத் தீர்மானிக்கப் போகிறது.

முன்னேற்றமும் முட்டுக்கட்டைகளும் மேக் இன் இந்தியா வெறும் முழக்கமாக இல்லாமல், ஒரு உண்மையான கொள்கையாக மாறியுள்ளது.

தற்போதைய சூழலில் இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) உற்பத்தித் துறை 17% பங்களிக்கிறது. எலக்ட்ரானிக்ஸ், மருந்துகள் மற்றும் ஆட்டோமொபைல், பசுமை எனர்ஜி உள்ளிட்ட துறைகளில் முதலீடுகள் குவிந்துள்ளன. இதனிடையே செல்போன் ஏற்றுமதி மட்டும், சமீபத்திய ஆண்டுகளில் 20 பில்லியன் டாலர்களை தாண்டியுள்ளது. இந்தியாவின் மிகப்பெரிய ஏற்றுமதி நாடான அமெரிக்கா, சில பொருட்களுக்கு 50% வரை வரி விதித்துள்ளது. இது இந்திய தொழிற்சாலைகளுக்கு ஒரு நேரடி எச்சரிக்கை மணி எனலாம்.

# ஈரானை எச்சரிக்கும் டிரம்ப்!... பெரிய போர்க்கப்பல் ஆன் தி வே!.. சரண்டர் ஆகுங்க!.




அமெரிக்கா, ஜன. 29–

கடந்த சில மாதங்களாகவே அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் பல அதிரடி அறிவிப்புகளை வெளியிட்டு வருகிறார். ஒருபக்கம் பல நாடுகளுக்கும் வரிகளை உயர்த்துகிறார். ரஷ்யாவிடம் கச்சா எண்ணெய் வாங்கினால் இந்தியாவுக்கு 500 சதவீத வரி என அறிவித்தார்.

ஒரு பக்கம் பல நாடுகளையும் அவர் மிரட்டி வருகிறார். வெனிசுலா அதிபரை கைது செய்து சிறையில் அடைத்தார். கிரீன்லாந்து அமெரிக்காவுக்கே சொந்தம் அதை விரைவில் கைப்பற்றுவோம் என சொல்லி சர்ச்சையை கிளப்பினார்.

ஒருபக்கம் ஈரான் அதிபரையும் தொடர்ந்து மிரட்டி வருகிறார்.. ஏனெனில் ஈரான் நாட்டில் அதிபர் மீது அதிருப்தியடைந்த அந்நாட்டு மக்கள் தெருக்களில் இறங்கி போராடி வருகிறார்கள். இந்த போராட்டம் கலவரமாக மாறியதில் 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் உயிரிழந்தனர். பலரை ஈரான் அரசு தூக்கிலிட்டது.

எனவே ஈரான் ஈராநாட்டில் அமெரிக்க படைகளை கள மிறக்க திட்டமிட்டுருக்கிறார் டொனல்ட் டிரம்ப். இந்நிலையில், ட்ரூத் என்கிற தளத்தில் அவர் இட்டுள்ள பதிவில் 'மிகப்பெரிய போர்க்கப்பல் படை ஈராணை நோக்கி அதி வேகமாக செல்கிறது.. ஈரான் அணு ஆயுதங்களை கைவிட்டு உடனடியாக பேச்சுவார்த்தைக்கு முன் வர வேண்டும்.. இல்லையெனில் வெனிசுலாவில் நடத்திய தாக்குதலை விட பேரழிவை ஏற்படுத்தும் மிக கடுமையான தாக்குதலை ஈரான் சந்திக்க நேரிடும்.. நேரம் கடந்து கொண்டிருக்கிறது' என மிரட்டியிருக்கிறார்.

# தைப்பூசம்: பழனிக்கு சிறப்பு ரயில்கள்.. சிறப்பு பேருந்துகள்!




சென்னை, ஜன. 29–

தைப்பூசத்தை ஒட்டி பழனிக்கு சிறப்பு ரயில்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. பிப்ரவரி 1 அன்று பழனியில் தைப்பூச விழாவையொட்டி மதுரை சந்திப்புக்கும் பழனிக்கும் இடையே முன்பதிவு செய்யப்படாத விரைவு சிறப்பு ரயில்கள் இயக்கப்பட உள்ளன. அதே போல சென்னை உள்ளிட்ட நகரங்களில் இருந்து சிறப்பு பேருந்துகளும் இயக்கப்படுகின்றன. தைப்பூச விழாவையொட்டி மதுரை சந்திப்புக்கும் பழனிக்கும் இடையே முன்பதிவு செய்யப்படாத விரைவு சிறப்பு ரயில்கள் இயக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளன.

ரயில் எண் 06145: மதுரை சந்திப்பு – பழனி முன்பதிவு செய்யப்படாத விரைவு சிறப்பு ரயில் 01.02.2026 (ஞாயிற்றுக்கிழமை) அன்று காலை 6 மணிக்கு மதுரை சந்திப்பிலிருந்து புறப்பட்டு அதே நாளில் காலை 08.30 மணிக்கு பழனியை வந்தடையும். சிறப்பு ரயில்கள் மறுமார்க்கமாக ரயில் எண். 06146: பழனி – மதுரை சந்திப்பு முன்பதிவு செய்யப்படாத விரைவு சிறப்பு ரெயில் 01.02.2026 (ஞாயிற்றுக்கிழமை) அன்று பிற்பகல் 2.25 மணிக்கு பழனியில் இருந்து புறப்பட்டு அதே நாளில் மாலை 5 மணிக்கு மதுரை சந்திப்பை வந்தடையும். இந்த ரயில்கள் சோழவந்தான், கொடைக்கானல் சாலை, அம்பதுரை, திண்டுக்கல், ஒட்டன்சத்திரம் ஆகிய இடங்களில் நிற்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**சிறப்பு பேருந்துகள் :**

வார இறுதி நாட்கள், ஜன 30, 31 மற்றும் பிப்ரவரி 1 தைப்பூசத்தையோட்டி தமிழக அரசு சார்பில் சிறப்பு பேருந்துகள் இயக்கப்படுகின்றன. தைப்பூசத்தை முன்னிட்டு சென்னையிலிருந்தும் இதர இடங்களுக்கும் மற்றும் பிற இடங்களிலிருந்தும் கூடுதலான பயணிகள் தமிழகம் முழுவதும் பயணம் மேற்கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. இதையொட்டி சென்னை கிளாம்பாக்கத்தில் இருந்து நாளை (ஜனவரி 30) 360 பேருந்துகளும், (ஜனவரி 31) 485 பேருந்துகளும் இயக்கப்பட உள்ளன. சென்னை கிளாம்பாக்கத்திலிருந்து திருவண்ணாமலை, திருச்சி, கும்பகோணம், மதுரை, திருநெல்வேலி, நாகர்கோவில், கன்னியாகுமரி, தூத்துக்குடி, கோயம்புத்தூர், சேலம், ஈரோடு, திருப்பூர் ஆகிய இடங்களுக்கு 30/01/2026 [வெள்ளிக்கிழமை) அன்று 360 பேருந்துகளும், 31/01/2026 (சனிக்கிழமை) 485 பேருந்துகளும் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது.





ராமநாதபுரம் மாவட்டம் கீழக்கரையை சார்ந்த எலுமினா நிறுவனத்தின் நிறுவனர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரி இஃப்ஹாம் அஹ்சான் செயற்கை நுண்ணறிவு (AI) மற்றும் கல்வி மதிப்பீட்டு முறைகளை மறுவடிவமைத்து புதுமையான தீர்வுகள் மூலம் மதிப்பீட்டை சிறந்த முறையில் வடிவமைத்ததற்காக ஆஸ்திரேலியாவில் தொடங்கப்பட்ட முன்னணி கல்வி தொழில்நுட்ப நிறுவனம் அவரைப் பாராட்டி சான்றிதழ் வழங்கி கௌரவித்தது. மேலும் இந்த நிறுவனம் கல்லூரிகள் பல்கலைக்கழகங்கள் பள்ளிகள் மற்றும் அரசு துறைகள் நவீன தொழில்நுட்ப மூலம் மதிப்பீடுகள் தீர்வுகள் காணப்படுவதும் தேர்வு முறைகளை வடிவமைப்பதிலும் சிறந்து விளங்கியதாக தெரிவித்தனர். லூஹா ஜுவல்லரி நிறுவனர் ஹமீத் உள்ளிட்ட பலரும் பாராட்டினர்.

# சோழவந்தான் அருகே குருவித்துறையில் பூக்குழி இறங்கி நேர்த்திக்கடன்!



சோழவந்தான், ஜன. 29–

மதுரை மாவட்டம் சோழவந்தான் அருகே குருவித்துறை அணைப்பட்டி மெயின் ரோட்டில் வேட்டார் குளம் அருகில் ஆதி மாசாணி அம்மன் கோவில் உள்ளது. இங்கு எட்டாம் ஆண்டு திருவிழா கடந்த ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் தொடங்கியது தொடர்ந்து திங்கட்கிழமை மயான பூஜை நடைபெற்றது. செவ்வாய்க்கிழமை காலை வைகை ஆற்றில் இருந்து சக்தி கரகம் அலங்காரம் செய்யப்பட்டு பக்தர்கள் புடை சூழ எடுத்துவரப்பட்டது. தொடர்ந்து பூக்குழிக்காக கண் திறக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது தொடர்ந்து பக்தர்கள் பூக்குழி இறங்கி நேர்த்திக்கடன் செலுத்தினார்கள். இன்று காலை பெண்கள் முளைப்பாரி எடுத்து ஊர்வலமாக சென்று வைகை ஆற்றில் கரைத்தனர்.



# தசாங்க யோகத்தால் இந்த 4 ராசிக்காரர்களுக்கு பம்பர் நன்மைகள்!



ஜோதிடத்தின்படி, கிரகங்களின் நிலை மற்றும் பார்வை மாறும் போது ஒரு நபரின் வாழ்க்கையின் திசையும் மாறுகிறது. பிப்ரவரி மாதத்தில், கிரகங்களின் அரசனான சனியும், புத்திக்கு அதிபதியான புதனும் இணைந்து, மிகவும் அரிதான 'தசாங்க யோகத்தை' உருவாக்குகின்றன. இந்த யோகம் ஜோதிடத்தில் மிகவும் செல்வாக்கு மிக்கதாகக் கருதப்படுகிறது, மேலும் இது குறிப்பாக 4 ராசிக்காரர்களின் வாழ்க்கையில் அதிர்ஷ்டத்திற்கான கதவைத் திறக்கும்.

**தசாங்க யோகத்தின் முக்கியத்துவம்**

சனி கர்ம காரகராக இருக்கும்போது, புதன் வியாபாரம் மற்றும் தகவல் தொடர்புக்கு அதிபதியாக இருக்கிறார். இந்த இரண்டின் சேர்க்கை வேலையில் ஸ்திரத்தன்மையையும், வியாபாரத்தில் பெரும் லாபத்தையும் தருகிறது. சனியின் ஒழுக்கமும் புதனின் புத்திசாலித்தனமும் இணையும்போது, கடின உழைப்பிற்கு நிச்சயம் பலன் கிடைக்கும். இந்த யோகத்தால் எந்தெந்த அதிர்ஷ்ட ராசிக்காரர்கள் பயனடைவார்கள் என்று பார்ப்போம்.

**ரிஷபம்**

தசாங்க யோகம் இந்த ராசிக்காரர்களுக்கு நிதி செழிப்பைக் கொண்டு வரும். நீண்ட நாட்களாகத் தடைப்பட்டிருந்த வேலைகள் சுமுகமாக முடிவடையும். உயர் அதிகாரிகளிடமிருந்து ஆதரவு கிடைக்கும், மேலும் புதிய வருமான வழிகள் உருவாகும்.

**மிதுனம்**

புதன் உங்கள் ராசி அதிபதியாக இருப்பதால், இந்த யோகம் உங்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக இருக்கும். வெளிநாட்டு முதலீடு அல்லது நீண்ட தூரப் பயணங்களால் நீங்கள் பயனடைவீர்கள். போட்டித் தேர்வுகளில் ஈடுபடுபவர்களுக்கு வெற்றி குறித்த நல்ல செய்தி கிடைக்கும்.

**கன்னி**

இது உங்கள் புத்திசாலித்தனம் அங்கீகரிக்கப்படும் நேரம். வியாபாரிகளுக்கு, இந்த காலகட்டத்தில் மேற்கொள்ளப்படும் அனைத்து வேலைகளும் பலனளிக்கும். பழைய கடன்களிலிருந்து விடுபடுவீர்கள், மேலும் வீட்டில் சுப நிகழ்வுகள் நடைபெறும்.

**கும்பம்**

சனியின் சொந்த ராசியான கும்பத்தில் இந்த யோகத்தின் தாக்கம் அதிகமாக இருக்கும். சமூகத்தில் உங்கள் மரியாதையும் கௌரவமும் அதிகரிக்கும். புதிய வாகனம் அல்லது சொத்து வாங்குவதற்கான யோகம் உள்ளது, மேலும் இது செழிப்புக்கு ஒரு நல்ல நேரம்.

தசாங்க யோகத்தின் தாக்கத்தால், தொழில்நுட்பம், ஆராய்ச்சி மற்றும் கல்வித் துறைகளில் உள்ளவர்கள் வெற்றியைப் பெறுவார்கள். சனியின் ஸ்திரத்தன்மை மற்றும் புதனின் தர்க்க சக்தி ஆகியவற்றின் கலவையால், இந்த காலகட்டத்தில் எடுக்கப்படும் முடிவுகள் நீண்ட கால நன்மைகளைத் தரும். ஜாதகத்தில் இந்த கிரகங்கள் வலுவாக இருந்தால், அரசியல் ஆதாயங்கள் மற்றும் உயர் பதவிகளுக்கான வாய்ப்பும் உள்ளது.

இந்த நேரத்தில் பச்சை நிற ஆடைகளை அணிவதும், விநாயகப் பெருமானை வழிபடுவதும் உங்கள் வேலைகளில் உள்ள தடைகளை நீக்கி, மகிழ்ச்சியையும் செழிப்பையும் அதிகரிக்க உதவும். இந்த காலகட்டத்தில், சனி பகவானுக்கு நல்லெண்ணெய் தீபம் ஏற்றி, புதனின் அருளைப் பெற பாசிப்பருப்பை தானம் செய்வது சிறந்தது. இது ஜாதகத்தில் உள்ள குறைகளை நீக்கி, இந்த ராஜயோகத்தின் முழுப் பலன்களையும் பெற உதவும்.

# ஒட்டன்சத்திரத்தில் யூகோ பேங்க் புதிய கிளை திறப்பு!



ஒட்டன்சத்திரம், ஜன. 29–

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் – திண்டுக்கல் பழனி ரோடு எம்.என்.ஏ காம்ப்ளக்ஸ் அருகில் யூகோ பேங்க் புதிய கிளை திறப்பு விழா நடைபெற்றது. விழாவிற்கு ஒட்டன்சத்திரம் ஒருங்கிணைந்த வர்த்தகர்கள் சங்க தலைவர் அம்மன் பி. கே. சுப்பிரமணி கலந்துகொண்டு யூகோ பேங்க் புதிய கிளையை ரிப்பன் வெட்டி திறந்து வைத்து, சேமிப்பின் அவசியம், பொதுமக்கள் வங்கி கணக்கு துவங்குவதன் முக்கியத்துவம், அனைத்து தரப்பு மக்களுக்கும் வங்கிகளால் ஏற்படும் நன்மைகள் ஆகியன குறித்து உரையாற்றினார். விழாவில் யூகோ பேங்க் கோவை கோட்ட பொது மற்றும் மண்டல மேலாளர் கே.சீனிவாச ராவ், தங்கச்சியம்மாபட்டி காந்தி காய்கனி மார்க்கெட் சங்க தலைவர் கே.தங்கவேல், திருநாவுக்கரசு, சூப்பர் டெக்ஸ் செல்வராஜ், அருண்பிரகாஷ் ஆகியோர் கலந்துகொண்டு வாழ்த்துரை வழங்கினர். இவ்விழாவில் தொழில் அதிபர்கள், முக்கியப்பிரமுகர்கள், வணிகர்கள் மற்றும் பொதுமக்கள் திரளானோர் கலந்துகொண்டனர். முடிவில் யூகோ பேங்க் ஒட்டன்சத்திரம் கிளை மேலாளர் எம்.அஜித் நன்றி கூறினார்.

# IMD, IHCL இன் ESG+ கட்டமைப்பு 'பாத்யா'யை வெளிப்படுத்துகிறது; கட்டமைக்கப்பட்ட நிலைத்தன்மை குறித்த ஒரு கஸ்ட்டி ஸ்டடி




சென்னை , ஜன. 29–

இந்திய ஹோட்டல்ஸ் கம்பனி (IHCL) தனது நிலைத்தன்மை மற்றும் பொறுப்புணர்வு கொண்ட ஹாஸ்பிடாலிட்டி திட்டமான பாத்யா–வை உலகப் புகழ்பெற்ற IMD Business School, Lausanne நடத்திய விரிவான கேஸ் ஸ்டடியில் முன்னிறுத்தியுள்ளது. இந்த ஆய்வு, IHCL–ன் கட்டமைக்கப்பட்ட நிலைத்தன்மை அணுகுமுறையை மற்றும் வணிகக் கொள்கைகளுடன் அதனை ஒருங்கிணைக்கும் முறையை பரிசீலிக்கிறது. ப்ரொஃபெசர் ஃப்ளோரியான் ஹூஸ், திரு. மனோஜ்குமார் செல்வராஜ், திருமதி ஹர்ஷா டொடிகல் மற்றும் திரு. பீட்டர் டாம்யானோவ் கூறுகையில், இந்த கேஸ் ஸ்டடி, சேவை சார்ந்த துறையில் நிலைத்தன்மையை ஒருங்கிணிப்பதில் உள்ள சிக்கல்களையும், பாத்யா போன்ற கட்டமைக்கப்பட்ட அணுகுமுறையின் முக்கியத்துவத்தையும் வெளிப்படுத்துகிறது. IHCL–ன் பாத்யா திட்டம் ஆறு முக்கிய தூண்களை அடிப்படையாகக் கொண்டுள்ளது — மரபு, கார்ப்பரேட் ஆட்சியமைப்பு, சமூகப் பொறுப்பு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு, கூட்டாளர் மாற்றம் மற்றும் நிலைத்த வளர்ச்சி — மேலும் 2030 இலக்குகளை நோக்கி செயல்படுகிறது. இதில் ஒரே முறையில் பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக் பொருட்களை நீக்குதல், 50% புதுப்பிக்கத்தக்க ஆற்றலைப் பயன்படுத்துதல், 100% கழிவுநீர் மறுசுழற்சி மற்றும் அனைத்து ஹோட்டல்களையும் உலகளாவிய நிலைத்தன்மை தரநிலைகளுக்கு ஏற்ப சான்றளிப்பது போன்ற இலக்குகள் அடங்கும்.

இது மட்டுமல்ல, IHCL திறன் மேம்பாடு, வேலைவாய்ப்பு உருவாக்கம் மற்றும் சமூகப் பங்களிப்பில் முன்னெடுப்பாக செயல்படுகிறது. 70 க்கும் மேற்பட்ட பாட்டிலிங் தளங்கள், 73 திறன் மையங்கள் மூலம் 35,000 க்கும் மேற்பட்ட இளைஞர்கள் பயிற்றுவிப்பு, 1,00,000 க்கும் மேற்பட்ட இளைஞர்களின் வாழ்கை மாற்றம், மற்றும் யுனெஸ்கோவுடன் ஒத்துழைத்து 100% பண்பாட்டு அசைவுக் கலைப்பழங்குகள் திட்டங்களை ஆதரிக்கும் முயற்சிகள் இதன் அடிப்படை அம்சங்களாகும்.

# நகரின் முதல் 'கிரீன் எக்ஸ்போ'வை நடத்த டெல்லி டெவலப்மெண்ட் ஆத்தாரிட்டி முன்வருகிறது

சென்னை , ஜன. 29–

டெல்லி துணை ஆளுநர் மற்றும் மதிப்பிற்குரிய பொது பசுமை வளாகங்களை உயிர்ப்பித்த துணை ஆளுநரின் முயற்சிகளை வழிகாட்டுதலாகக் கொண்டு, டெல்லி டெவலப்மெண்ட் ஆத்தாரிட்டி (DDA) தனது முதல் **'DDA கிரீன் எக்ஸ்போ 2026'**யை பிப்ரவரி 14–15, 2026 அன்று பான்சேரா பூங்காவில் நடத்த உள்ளது. நிலைத்தன்மை, நகர பசுமை மற்றும் இயற்கை சார்ந்த தீர்வுகளை மையமாகக் கொண்ட இந்த எக்ஸ்போ இந்திய நகரங்களின் எதிர்கால வளர்ச்சிக்கு தேசிய மேடையாக அமையும். துணை ஆளுநர் திரு. வினய் குமார் சக்சேனா கூறியபடி, நகரங்கள் பாரம்ப ரிய வளர்ச்சியைத் தாண்டி, நிலைத்த ன்மை, தாங்கும் திறன் மற்றும் குடிம க்கள் நலனை முன்னிறுத்தி வளர வேண்டும். DDA கிரீன் எக்ஸ்போ 2026, கொள்கை வடிவமைப்பாளர்கள், தொழில் துறை, புதுமையாளர்கள், மாணவர்கள் மற்றும் நகர நிர்வாக நிபுணர்களை ஒன்றி ணைத்து, எதிர்கால தலைமுறைக்கான சுத்தமான, பசுமையான மற்றும் தாங்கும் திறன் கொண்ட நகரங்களை உருவாக்க உதவும். DDA துணைத் தலைவர் திரு. என். சரவண்குமார் கூறியபடி, இந்த எக்ஸ்போ நகர பசுமை, நிலப்பரப்பு புனரமைப்பு மற்றும் நிலைத்த அடிக்கட்டமைப்பில் புதுமைகள் மற்றும் நடைமுறை தீர்வுகளை காட்சிப்படுத்தும். அறிவு பரிமாற்றம், கூட்டாண்மைகள் மற்றும் குடிமக்கள் பங்கேற்பு மூலம், DDA நகர சூழலில் காலநிலை உணர்வுள்ள நடைமுறைகளை விரை வாக ஏற்கும் சூழலை உருவாக்க நோக்கமாகிறது.

# சோழவந்தான் அருகே தென்கரை புதூர் பூவன் ஓடையில் மடை அமைக்க பூமி பூஜை!



சோழவந்தான், ஜன. 29–

மதுரை மாவட்டம் சோழவந்தான் அருகே தென்கரை புதூரில் அமைந்துள்ளபூவன் ஓடையில் மடை அமைக்க பூமி பூஜை தென்கரை புதூரில் நடைபெற்றது இந்த நிகழ்ச்சியில்கலந்து கொண்ட வெங்கடேசன் எம் எல் ஏ பணிகளை தொடங்கி வைத்தார் இந்த மடையானது சுமார் 1.5 கோடி மதிப்பில் கட்டப்பட உள்ளது தென்கரை புதூர் ஊத்துக்குளி மேல மட்டையான் பொட்டுல்பட்டி கீழ மட்டையான் கச்சிராயிருப்பு மேலக் கால் உள்ளிட்ட சுமார் 500க்கும் மேற்பட்ட ஏக்கர் பாசன நிலங்களுக்கு பாசன வசதி பெறக்கூடிய வகையில் நடைபெறும் பணிகளை தொடங்கி வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில் வாடிப்பட்டி தெற்கு ஒன்றிய செயலாளர் பசும்பொன்மாறன் சோழவந்தான் பேரூராட்சி தலைவர் எஸ் எஸ் கே ஜெயராமன் பேரூர் செயலாளர் வழக்கறிஞர் சத்திய பிரகாஷ் விவசாய அணி வக்கீல் முருகன் மாவட்ட பிரதிநிதி ஊத்துக்குளி ராஜாராம் தென்கரை சோழன் ராஜாசின்னமணி அவைத்தலைவர் மேலக்கால் சுப்பிரமணி முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் மஞ்சுளா ஐயப்பன் ஊராட்சி செயலாளர் முனியராஜ் ஊத்துக்குளி ராமலிங்கம் கச்சிராயிருப்பு பாண்டி மற்றும் பலர் கலந்து கொண்டனர் இந்த பாசன வசதி ஏற்படுத்த கோரி விவசாயிகள் சுமார் 50 ஆண்டுகளுக்கும் மேலாக அரசுக்கு கோரிக்கை விடுத்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## நலம் நலமறிய..! மருத்துவ குறிப்புகள்



## குளிர்காலத்தில் உங்களுக்கும் அடிக்கடி தலைவலி வருதா?



குளிர்காலத்தில் சிலருக்கு அடிக்கடி தலைவலி வரும். இதற்குப் பல காரணங்கள் உள்ளன. குளிர்ந்த காற்று மூளையில் உள்ள நரம்புகளைச் சுருங்கச் செய்கிறது. இது தலைவலிக்கு ஒரு பொதுவான காரணம்.

அதிக நேரம் குளிரில் இருப்பது வலியை அதிகரிக்கிறது. குளிர்காலத்தில் காற்று வறண்டு காணப்படும். இதனால், இந்த காலகட்டத்தில் மக்கள் குறைவாகத் தண்ணீர் குடிக்கிறார்கள்.

இது நீர்ச்சத்து குறைபாடு, மூளை மற்றும் நரம்புகளில் அழுத்தம் அதிகரித்தல் ஆகியவற்றுக்கு வழிவகுக்கிறது. இது தலைவலியை ஏற்படுத்துகிறது. எனவே, போதுமான அளவு தண்ணீர் குடிப்பது முக்கியம்.

குளிர்காலத்தில் சூரிய ஒளி குறைவாக இருக்கும். இது வைட்டமின் டி குறைபாட்டை ஏற்படுத்துகிறது. இதுவும் தலைவலி மற்றும் சோர்வை ஏற்படுத்தும். எனவே, சிறிது நேரம் வெயிலில் செலவிடுங்கள்.

குளிர்காலத்தில் தூக்கம் மற்றும் அன்றாடப் பழக்கவழக்கங்களில் ஏற்படும் மாற்றங்களால் மன அழுத்தம் அதிகரிக்கிறது.

இது தலைவலிக்கு வழிவகுக்கிறது. ஒவ்வொரு பருவத்திலும் தவறாமல் போதுமான தூக்கமும் ஓய்வும் பெறுவது மிகவும் முக்கியம்.

எனவே, வேலையோ அல்லது மற்ற விஷயங்களோ எவ்வளவு மன அழுத்தத்தை அளித்தாலும், நீங்கள் போதுமான அளவு தூங்க வேண்டும்.

சீரற்ற உணவுப் பழக்கம் மற்றும் அதிகப்படியான காஃபின் உட்கொள்வதும் தலைவலியை ஏற்படுத்தும். எனவே, குளிர்காலத்தில் உங்கள் உணவுப் பழக்கத்தில் சிறப்பு கவனம் செலுத்த வேண்டும். எளிதில் செரிமானமாகும், சத்தான உணவுகளை உண்ணுங்கள். உங்கள் அன்றாட வழக்கத்தில் காபி மற்றும் தேநீர் மூலம் காஃபின் உட்கொள்வதைக் கட்டுப்படுத்துவது நல்லது.

குளிர்காலத்தில் தலைவலியைக் குறைக்க, நீங்கள் அதிக தண்ணீர் குடிக்க வேண்டும். போதுமான தூக்கமும் ஓய்வும் பெறுங்கள். எளிதில் செரிமானமாகும் உணவுகளை உண்ணுங்கள். சளி பிடிக்கும் உணவுகளைத் தவிர்க்கவும். எதைப் பற்றியும் அதிகமாக மன அழுத்தத்திற்கு ஆளாகாதீர்கள்.

## மற்றொரு விமான விபத்து..! MP உட்பட 15 பேர் பலி.. கொலம்பியாவில் பெரும் சோகம்..!





கொலம்பியா, ஜன. 29–

கொலம்பியாவில் ஒரு பெரும் விமான விபத்து நிகழ்ந்துள்ளது. கொலம்பிய நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் உட்பட 15 பேர் பயணித்த இரட்டை எஞ்சின் கொண்ட விமானம் ஒன்று, புதன்கிழமை அன்று வெனிசுலா எல்லைக்கு அருகிலுள்ள மலைப்பாங்கான பகுதியில் விழுந்து நொறுங்கியதாக தலைநகர் பொகோட்டாவில் உள்ள அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த கோர விமான விபத்தில் விமானத்தில் இருந்த அனைத்துப் பயணிகளும் பணியாளர்களும் உயிரிழந்தனர். இந்த விமானம் கொலம்பியாவின் அரசுக்குச் சொந்தமான சடேனா (Satena) விமான நிறுவனத்தால் இயக்கப்பட்டது.

விமான விபத்தில் உயிரிழந்தவர்களில், கொலம்பியாவின் பிரதிநிதிகள் சபையின் உறுப்பினரான 36 வயது டியோஜெனெஸ்குயின்டெரோ மற்றும் வரவிருக்கும் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் கார்லோஸ் சல்செடோ ஆகியோரும் அடங்குவர்.

## ஆசிரியர் தகுதி தேர்வு தேர்ச்சி விழுக்காடு குறைத்து அரசாணை வெளியீடு!

சென்னை, ஜன. 29–

ஆசிரியர் தகுதித் தேர்வு (TET), தேர்ச்சி பெறுவதற்கான குறைந்தபட்ச மதிப்பெண் விழுக்காடு 5% குறைக்கப்பட்டு அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

மாற்றுத்திறனாளிகளுக்குக் குறைந்தபட்ச தேர்ச்சி மதிப்பெண் 50% அல்லது 75 மதிப்பெண்கள் என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. எஸ்சி/எஸ்டி (SC/ST) பிரிவினருக்கான தேர்ச்சி மதிப்பெண் 40% அல்லது 60 மதிப்பெண்கள் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இந்த அரசாணை கடந்த ஆகஸ்ட் 11–ஆம் தேதி தேர்வு எழுதியவர்களுக்கும், மேலும் ஆசிரியர்களாகத் தொடர்வதற்குத் தகுதித் தேர்வு எழுதவுள்ள ஆசிரியர்களுக்கும் பொருந்தும்.

## அஜித் பவாருக்குப் பிறகு.... தேசியவாத காங்கிரஸ் கட்சியை வழிநடத்தப் போவது யார்?

மும்பை, ஜன. 29–

அஜித் பவாரின் தனிப்பட்ட அதிகாரம் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் மீதான அவரது கட்டுப்பாட்டைச் சுற்றியே தேசியவாத காங்கிரஸ் கட்சி கட்டமைக்கப்பட்டிருந்த நிலையில், வாரிசுரிமை குறித்த கேள்வி இப்போது கட்சிக்குள் பெரிதாக எழத் தொடங்கியுள்ளது. கட்சியின் எதிர்காலத் தலைமை குறித்து நிச்சயமற்ற நிலை அதிகரித்து வரும் வேளையில், மூன்று மாறுபட்ட அதிகார மையங்கள் – குடும்ப உறுப்பினர்கள், நீண்டகால நண்பர்கள் மற்றும் என்.சி.பி–யின் பிராந்தியத் தலைவர்கள் – தத்தமது உரிமைகோரல்கள் மற்றும் வரம்புகளுடன் கட்டுப்பாட்டைக் கைப்பற்றப் போட்டியிட வாய்ப்புள்ளது. இதோ அந்தப் போட்டியாளர்கள் பற்றிய ஒரு பார்வை:

**குடும்பம்**

**அ) சுனேத்ரா பவார் (மனைவி):**

அஜித் பவார் முகாமில் மிக நேரடியான வாரிசு அரசியலுக்கான விருப்பமாக இவர் இருக்கிறார். பல பத்தாண்டுகளாக, அவர் ஒரு அமைதியான அரசியல் வாழ்க்கைத் துணையாகவே இருந்தார், முக்கியமாக மகளிர் குழுக்கள் மற்றும் நலத்திட்டங்கள் மூலம் பாரமதியில் சமூக மற்றும் நிறுவனப் பணிகளில் தீவிரமாகச் செயல்பட்டு வந்தார்.

அவரது அரசியல் பிரவேசம் 2024–ல் நிகழ்ந்தது, அப்போது அவர் பாரமதி மக்களவைத் தொகுதியில் சுப்ரியா சுலேவுக்கு எதிராகப் போட்டியிட்டார். அதில் அவர் தோல்வியடைந்தாலும், அந்தப் போட்டி அவருக்கு மாநிலம் தழுவிய அங்கீகாரத்தைக் கொடுத்ததுடன், அவரை வெறும் அஜித் பவாரின் மனைவி என்பதையும் தாண்டி ஒரு அரசியல் பிரமுகராக அறிமுகப்படுத்தியது. அஜித் பவாரின் ஆதரவாளர்களின் உணர்வுப்பூர்வமான விசுவாசம் மற்றும் பாரமதி எனும் குடும்பக் கோட்டையுடனான அவரது அடையாளம் ஆகியவை அவரது பலமாகும்.

சுனேத்ரா பவார் 2024 மார்ச் மாதம் மகாராஷ்டிராவிலிருந்து மாநிலங்களவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அஜித் பவார் பிரிவு ஆளும் கூட்டணியில் இணைந்த சிறிது காலத்திலேயே, பா.ஜ.க தலைமையிலான மகாயுதி கூட்டணியின் வேட்பாளராக அவர் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவரது ஆறு ஆண்டு கால பதவிக்காலம் 2024 ஏப்ரலில் தொடங்கியது.

இருப்பினும், அவருக்குச் சட்டமன்ற அல்லது நிர்வாக அனுபவம் இல்லை. கட்சிக்குள், அவர் நிறுவனத்தை சுயாதீனமாக நடத்தும் திறன் கொண்ட ஒரு தலைவரை விட, 'பவார்' என்ற பெயரின் அடையாளப்பாதுகாவலராகவே பார்க்கப்படுகிறார்.

**ஆ) பார்த்த் பவார் (மகன்):**

2019 மக்களவைத் தேர்தலில் மாவல் தொகுதியில் களம் இறக்கப்பட்டபோது, பார்த்த் மூன்றாம் தலைமுறை பவாராக முன்னிறுத்தப்பட்டார்; அந்த ஆண்டு சரத் பவார் போட்டியிட வேண்டாம் என்ற முடிவை எடுத்திருந்ததுடன் இது ஒத்துப்போனது. அவரது வேட்புமனு என்பது குடும்பத்திற்குள் அஜித் பவார் தனது சொந்த அரசியல் வாரிசை நிலைநிறுத்த முயன்ற ஒரு முயற்சியாகவே பரவலாகப் பார்க்கப்பட்டது.

பார்த்தின் தோல்வி மற்றும் அதைத் தொடர்ந்து அவர் தீவிர அரசியலில் இருந்து விலகியது அந்தத் திட்டத்தைத் தடுத்து நிறுத்தியது. சட்டமன்ற அரசியல் மூலம் தளத்தை அமைத்த அவரது உறவினர் ரோகித் பவாரைப் போலல்லாமல், பார்த்த் ஒரு தொகுதி அளவிலான வலைப்பின்னலையோ அல்லது தொண்டர் படையையோ உருவாக்கவில்லை. அவரது குடும்பப் பெயர் அவரை அரசியலில் பொருத்தமானவராக வைத்திருந்தாலும், தேர்தல் வெற்றிகள் இல்லாதது அவரை ஒரு உடனடி வாரிசாகக் காட்டாமல் எதிர்கால வாய்ப்பாகவே வைக்கிறது.

**இ) பிரபுல் படேல்:**



அவர் என்.சி.பி–யின் மிகவும் அனுபவம் வாய்ந்த வியூகவாதி மற்றும் அதன் நிறுவனர்களில் ஒருவராவார். முன்னாள் மத்திய சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சராகவும், டெல்லியில் சரத் பவாரின் நீண்டகால பேச்சுவார்த்தையாளராகவும் இருந்த படேல், 2023 பிளவின் போது அஜித் பவார் முகாமிற்கு மாறினார், இது அந்தப் பிரிவிற்கு ஒரு சட்டப்பூர்வமான தன்மையையும் நிறுவன ஆழத்தையும் கொடுத்தது.

கூட்டணி மேலாண்மை, தேசிய அதிகார மையங்களுக்கான அணுகல் மற்றும் கட்சி இயந்திரம் பற்றிய ஆழமான அறிவு ஆகியவை அவரது பலமாகும். நெருக்கடி காலங்களில் கட்சியை ஒன்றிணைக்கக்கூடிய ஒரு 'ட்ரபிள்ஷூட்டர்'ஆக அவர் பரவலாக மதிக்கப்படுகிறார்.

இருப்பினும், படேல் ஒருபோதும் மக்கள் செல்வாக்கு மிக்க தலைவராக இருந்ததில்லை மற்றும் மகாராஷ்டிராவில் வலுவான தேர்தல் தளத்தைக் கொண்டிருக்கவில்லை. அவரது தலைமை ஒரு மேலாண்மை ரீதியானதாகவே இருக்கும், இது நீண்ட கால அரசியல் முன்னிறுத்தலை விட ஒரு நிலைப்படுத்துதல் அல்லது இடைக்காலப் பொறுப்பிற்கு அவரை மிகவும் பொருத்தமானவராக மாற்றுகிறது.

**ஈ) சுனில் தட்கரே:**

ராய்காட்டில் மாவட்ட அரசியலில் இருந்து உயர்ந்த அவர், கூட்டுறவுத் துறை மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் மூலம் கொங்கன் பகுதியில் என்.சி.பி–யின் வலுவான தளத்தை உருவாக்கினார். அமைச்சராக, அவர் நீர்ப்பாசனம் மற்றும் ஊரக வளர்ச்சி போன்ற முக்கியத் துறைகளைக் கையாண்டார், இது அவருக்கு மாநிலம் தழுவிய நிர்வாக அனுபவத்தைக் கொடுத்தது.

2023 பிளவுக்குப் பிறகு, அவர் அஜித் பவார் தலைமையிலான பிரிவின் மகாராஷ்டிர மாநிலத் தலைவரானார், இது அவரை கட்சி அமைப்பின் பொறுப்பாளராக ஆக்கியது. தொண்டர்கள் மற்றும் மாவட்ட அளவிலான இயந்திரங்கள் மீதான அவரது கட்டுப்பாடு அவரது முக்கிய பலமாகும், இது அவரை ஒரு நடைமுறைச் சாத்தியமான நிறுவனத் தலைவராக மாற்றுகிறது.

இருப்பினும், அவரது அரசியல் செல்வாக்கு கொங்கன் பகுதியில் மட்டுமே குவிந்துள்ளது, மேலும் அவரிடம் அஜித் பவாருக்கு இருந்த மாநிலம் தழுவிய அதிகாரம் இல்லை.

வெளிவட்டத் தலைவர்கள்

**உ) தனஞ்ஜெய் முண்டே:**

அஜித் பவார் முகாமில் மக்கள் செல்வாக்கு கொண்ட ஒரு சில தலைவர்களில் இவரும் ஒருவர். அஜித் பவாரின் நெருங்கிய கூட்டாளியான இவரது ஓ.பி.சி பின்னணி, மராத்தியர் வாக்கு வங்கியைப் பெரும்பான்மையாகக் கொண்ட ஒரு கட்சி இவரை ஒரு பரந்த தலைவராக ஏற்குமா என்ற கேள்விகளை எழுப்புகிறது.

பீட் மாவட்டத்திற்குள் பெரும்பாலும் மட்டுப்படுத்தப்பட்ட ஒரு பிராந்தியத் தலைவரான இவர் மீது ஏராளமான சர்ச்சைகள் உள்ளன — பீட் பஞ்சாயத்துத் தலைவர் சந்தோஷ் தேஷ்முக் கொலை தொடர்பான பெரும் அரசியல் கொந்தளிப்பிற்குப் பிறகு ஜனவரி 2025–ல் மகாராஷ்டிர அமைச்சரவையிலிருந்து இவர் ராஜினாமா செய்தது உட்பட — இவை இவரை ஒரு வாரிசாக முன்னிறுத்துவதை கடினமாக்குகின்றன.

**ஊ) சகன் புஜ்பால்:**

மகாராஷ்டிராவின் மிக மூத்த ஓ.பி.சி தலைவர்களில் ஒருவரான புஜ்பால், சிவசேனாவிலும் பின்னர் என்.சி.பி–யிலும் தனது வேர்களைக் கொண்டவர். அவர் துணை முதல்வராகவும் பணியாற்றியுள்ளார் மற்றும் பொதுப்பணித்துறை மற்றும் உணவு மற்றும் குடிமைப் பொருள் வழங்கல் போன்ற முக்கியத் துறைகளைக் கையாண்டுள்ளார். ஊழல் வழக்கில் சிறை சென்று பின்னர் அரசியலுக்குத் திரும்பிய அவர், பிளவுக்குப் பிறகு அஜித் பவார் பிரிவில் இணைந்தார். வட மகா ராஷ்டிராவில் உள்ள அவரது விசுவாசமான ஓ.பி.சி வாக்கு வங்கி மற்றும் அவரது நீண்ட கால நிர்வாக அனுபவம் ஆகியவை அவரது பலமாகும். இருப்பினும், வயது மற்றும் கடந்த கால சர்ச்சைகள் எதிர்காலத் தலைவராக அவரது ஈர்ப்பைக் குறைக்கின்றன. அவர் ஒரு கூட்டுத் தலைமை ஏற்பாட்டில் துணைப் பாத்திரத்தை வகிக்கவே அதிக வாய்ப்புள்ளது, கட்சியின் ஒரே முகமாக உருவெடுப்பது கடினம்.

## 2026 தமிழக சட்டமன்ற தேர்தல் எப்போது..? தேதியை இறுதி செய்த தேர்தல் ஆணையம்..!!

சென்னை, ஜன. 29–

2026–ஆம் ஆண்டு சட்டமன்ற தேர்தலுக்கான களம் சூடுபிடிக்கத் தொடங்கியுள்ள நிலையில், தேர்தல் திருவிழாவிற்கான அதிகாரப்பூர்வ அறிவிப்பு மார்ச் முதல் அல்லது இரண்டாவது வாரத்தில் வெளியாகும் என தேர்தல் ஆணைய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. தமிழகம், கேரளா,




மேற்கு வங்கம் உள்ளிட்ட 5 மாநிலங்களில் நடைபெறவுள்ள இந்தத் தேர்தல் பணிகளைத் துரிதப்படுத்தும் நோக்கில், இந்திய தேர்தல் ஆணையம் (ECI) வரும் பிப்ரவரி 4 மற்றும் 5–ஆம் தேதிகளில் மிக முக்கியமான ஆலோசனைக் கூட்டத்தை நடத்த திட்டமிட்டுள்ளது.

தேர்தல் ஆணையத்தின் இந்த உயர்மட்ட கூட்டத்தில் பங்கேற்குமாறு பல்வேறு மாநிலங்களை சேர்ந்த மூத்த ஐஏஎஸ் (IAS) மற்றும் ஐபிஎஸ் (IPS) அதிகாரிகள், உள்துறை செயலாளர்கள் ஆகியோருக்குத் தேர்தல் ஆணையம் அழைப்பு விடுத்துள்ளது. மாநிலங்களின் சட்டம்–ஒழுங்கு நிலைமை, பாதுகாப்புப் படைகளின் தேவை மற்றும் தேர்தல் பார்வையாளர்களின் பணிகள் குறித்து இந்தக் கூட்டத்தில் விரிவாக விவாதிக்கப்பட உள்ளது. குறிப்பாகப் பதற்றமான வாக்குச்சாவடிகளைக் கண்டறிந்து, அங்கு மேற்கொள்ளப்பட வேண்டிய கூடுதல் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து விரிவான அறிக்கைகள் சமர்ப்பிக்கப்ப டலாம் என தெரிகிறது.

தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டவுடன் மாதிரி நடத்தை விதிகள் உடனடியாக அமலுக்கு வரும் என்பதால், அதற்கு முன்னதாகவே அனைத்து அடிப்படை பணிகளையும் முடிக்குமாறு அந்தந்த மாநிலத் தலைமை தேர்தல் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. 2026 தேர்தல் களம் பல்வேறு புதிய கட்சிகளின் வருகையாலும், வலுவான கூட்டணி மாற்றங்களாலும் மிகுந்த எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ள நிலையில், தேர்தல் ஆணையத்தின் இந்த நகர்வு அரசியல் கட்சிகளிடையே பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.




இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்

127, T.P.K.ரோடு, மதுரை.

Ph: 98659 88882

மதுரை to சென்னை ரெகுலர் சர்வீஸ் பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது

சென்னை Ph: 98659 88881


## வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க கடைசி நாள்!

சென்னை, ஜன. 29–

தமிழகத்தில் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க வழங்கப்பட்ட நீட்டிக்கப்பட்ட அவகாசம் நாளையுடன் (ஜனவரி 30) முடிகிறது. வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க இதுவரை தமிழகத்தில் 16.02 லட்சம் பேர் மனு அளித்துள்ளனர்.

ஜனவரி 18–ஆம் தேதியுடன் முடிவடைய இருந்த பெயர் சேர்க்கும் பணியை, தேர்தல் ஆணையம் ஜனவரி 30 வரை நீட்டித்து உத்தரவிட்டது.

6.41 கோடியாக இருந்த தமிழக வாக்காளர்களின் எண்ணிக்கை எஸ்.ஐ.ஆர் பணிக்குப் பின் 5.43 கோடியாகக் குறைந்துள்ளது.

## வேலை வாய்ப்பு

## இந்திய இராணுவத்தில் 381 காலியிடங்கள்




Organization Name: Indian Army
Job Category: Central Govt Jobs
Employment Type: Regular Basis
Total No of Vacancies: 381 67th SSC (Technical) Men and Women (OCT 2026) Posts
Place of Posting: All Over India
Starting Date: 07.01.2026 at 03.00 PM
Last Date: 05.02.2026 at 03.00 PM
Apply Mode: Online
Official Website: https://www.joinindianarmy.nic.in/

## ஒரே நாளில் சவரனுக்கு ரூ.9,520 உயர்ந்து அதிர்ச்சி அளித்த தங்கம் விலை!




சென்னை, ஜன. 29–


தங்கம் விலை இன்று ஒரே நாளில் சவரனுக்கு ரூ.9,520 அதிரடியாக உயர்ந்துள்ளது. சென்னையில் இன்று 22 கேரட் ஆபரணத் தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ.9,520 உயர்ந்து ரூ.1,34,400–க்கு விற்பனை செய்யப்படுகிறது. தங்கம் விலை கிராமுக்கு ரூ.1,190 உயர்ந்து ரூ.16,800–க்கு விற்பனை செய்யப்படுகிறது.

தங்கத்தை தொடர்ந்து வெள்ளி விலையும் இன்று உயர்ந்துள்ளது. வெள்ளி கிராமுக்கு ரூ.25 உயர்ந்து ஒரு கிராம் வெள்ளி ரூ.425–க்கும் பார் வெள்ளி 4 லட்சத்து 25 ஆயிரம் ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

## சினிமா துளிகள்..!



## முழுமையாக வசனங்கள் இல்லாமல் உருவாகியுள்ள காந்தி டாக்ஸ் படத்தின் ரிலீஸ்?




Zee Studios, Kyoorius Digital Pvt Ltd, Pincmoon Meta Studios மற்றும் Movie Mill Entertainment இணைந்து தயாரித்துள்ள, "காந்தி டாக்ஸ்" திரைப்படத்தின் டிரெய்லர் அதிகாரப்பூர்வமாக வெளியிடப்பட்டுள்ளது.

முழுமையாக வசனங்கள் இல்லாமல் உருவாகியுள்ள இந்தப்படம், சினிமா மரபுகளை உடைத்து, துணிச்சலான உள்ளடக்கம் மற்றும் கதைசொல்லலை நம்பும் தயாரிப்பாளர்களின் உறுதியை வலுவாக பிரதிபலிக்கிறது.

ஒலி, ஆரவாரம், பிரம்மாண்டம் ஆகியவற்றால் நிரம்பிய இன்றைய சினிமா சூழலில், "காந்தி டாக்ஸ் " தன்னடக்கத்துடனும் நம்பிக்கையுடனும் வருகை தருகிறது. வசனங்கள் இன்றி, உணர்ச்சியை தூண்டும் காட்சிகள், பதற்றம் நிறைந்த மௌனம், ஆழமான உணர்வுகள் ஆகியவற்றின் மூலம் டிரெய்லர் பலவற்றை சொல்லுகிறது.

காதுகளால் மட்டும் அல்ல, பார்வையாளர்களின் உள்ளுணர்வுகளாலும் கேட்க வைக்கும் ஒரு சினிமா அனுபவமாக இது அமைந்துள்ளது.

**விஜய் சேதுபதி – அரவிந்த் சாமி**

விஜய் சேதுபதி, அரவிந்த் சாமி, அதிதி ராவ் ஹைதாரி, சித்தார்த் ஜாதவ் ஆகிய முன்னணி நட்சத்திரங்களின் , நுணுக்கமும் உள்ளார்ந்த நடிப்பும், உணர்வுப்பூர்வமான மோதல்களும் நிறைந்த சுவடுகளை, டிரெய்லர் வெளிப்படுத்துகிறது. வார்த்தைகள் இல்லாததால், முகபாவனைகளும் நடிகர்களின் இருப்புமே கதையின் மையமாக இருக்கின்றது. 2026 ஜனவரி 30 அன்று "காந்தி டாக்ஸ்" திரைப்படம் உலகமெங்கும் திரையரங்குகளில் வெளியாகிறது.




# பரபரப்பாகும் அரசியல்களம்: கூடுதல் தொகுதிகளுக்கு தி.மு.க. கைவிரிப்பு: அதிர்ச்சியில் கூட்டணி கட்சிகள்!

சென்னை, ஜன. 29–
கடந்த 2021–ம் ஆண்டு நடைபெற்ற 16–வது சட்டசபை தேர்தலில் வலுவான கூட்டணியுடன் களம் இறங்கிய தி.மு.க., இந்த முறை ஆளுங்கட்சி என்ற பலத்துடன் கூடுதல் கட்சிகளையும் கூட்டணிக்குள் கொண்டுவர முயற்சி மேற்கொண்டு வருகின்றது. கடந்த முறை தி.மு.க. கூட்டணியில்



தி.மு.க. – 173, காங்கிரஸ் – 25, விடுதலை சிறுத்தைகள் கட்சி – 6, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி – 6, இந்திய கம்யூனிஸ்டு கட்சி –6, ம.தி.மு.க. – 6, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் – 3, கொங்குநாடு மக்கள் தேசிய கட்சி – 3, மனிதநேய மக்கள் கட்சி – 2, தமிழக வாழ்வுரிமை கட்சி, அகில இந்திய பார்வர்டு பிளாக், ஆதி தமிழர் பேரவை ஆகியவை தலா 1 தொகுதிகளிலும் போட்டியிட்டன.

**தி.மு.க. கூட்டணியில் தே.மு.தி.க.**

இந்த முறை, கூடுதலாக நடிகர் கமல்ஹாசன் தலைமையிலான மக்கள் நீதி மய்யமும் கூட்டணியில் இணைந்துள்ள நிலையில், மேலும் சில கட்சிகளையும் கூட்டணி வளையத்துக்குள் கொண்டுவர தி.மு.க. பேச்சு வார்த்தை நடத்தி வருகிறது.

நீண்ட இழுபறிக்கு பிறகு தே.மு.தி.க., தி.மு.க. கூட்டணியில் இணையும் என்று தெரிகிறது. அந்தக் கட்சிக்கு 6 தொகுதிகளும், ஒரு ராஜ்ய சபா சீட்டும் வழங்க உறுதியளிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

இதேபோல், கடந்த 2024–ம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்ற தேர்தலின்போது தி.மு.க. கூட்டணியில் இணைந்த மக்கள் நீதி மய்யத்துக்கு அப்போது தொகுதிகள் வழங்கப்படவில்லை. ஒரு ராஜ்ய சபா சீட் மட்டுமே வழங்கப்பட்டது. தற்போது, அக்கட்சியின் தலைவர் கமல்ஹாசன் எம்.பி.யாக இருந்து வருகிறார்.

**கமல்ஹாசன் முடிவு**

எனவே, வரும் சட்டசபை தேர்தலில் இரட்டை இலக்கத்தில் தொகுதிகளை பெற்று கட்சி நிர்வாகிகளை போட்டியிட வைக்க கமல்ஹாசன் முடிவு செய்துள்ளார். அப்போதுதான் கட்சியும் உயிர்ப்புடன் பயணிக்கும் என்பதால், அவர் இதில் உறுதியாக இருக்கிறார்.

ஆனால், தி.மு.க. தரப்பிலோ மக்கள் நீதி மய்யத்துக்கு 3 தொகுதிகள் மட்டுமே வழங்க முடிவு செய்திருப்பதாக தெரிகிறது. மேலும், எஸ்.டி.பி.ஐ. கட்சியையும் கூட்டணிக்குள் கொண்டுவந்து 2 தொகுதிகளை வழங்கலாமா? என்றும் யோசித்து வருகிறது.

இந்த நிலையில், ஏற்கனவே தி.மு.க. கூட்டணியில் கடந்த சட்டசபை தேர்தல் முதல் இருந்து வரும் கட்சிகள் எல்லாம் இந்த முறை இரட்டை இலக்கத்தில் தொகுதிகளை கேட்டுபெற முடிவு செய்துள்ளது. காங்கிரஸ் கட்சியோ ஒரு படி மேலேப்போய், ஆட்சியிலும் பங்கு என்ற கோரிக்கையை முன்வைத்து வருகிறது.

**கூட்டணி கட்சிகள் அதிர்ச்சி**

ஆனால் விஜய்யின் அரசியல் வருகையால் கண்ணும் கருத்துமாக காய்களை நகர்த்தி வரும் தி.மு.க., ஏற்கனவே கூட்டணியில் தொடரும் கட்சிகளுக்கு கடந்த முறை ஒதுக்கப்பட்ட தொகுதிகளின் எண்ணிக்கையையே மீண்டும் ஒதுக்க முடிவு செய்திருப்பதாக தெரிகிறது. இதனால், கூட்டணி கட்சிகள் அதிர்ச்சி அடைந்துள்ளன.

விரைவில், கூட்டணி கதவை அடைத்துவிட்டு, தொகுதி பங்கீட்டு பேச்சு வார்த்தையையும் தொடங்க தி.மு.க. திட்டமிட்டுள்ளது. அனேகமாக, பிப்ரவரி முதல் வாரத்தில் இந்த பணிகள் எல்லாம் சுறுசுறுப்படையும் என்று தெரிகிறது.

**தொகுதி பங்கீடு**

தேசிய கட்சியான காங்கிரசுடன் முதலில் தொகுதி பங்கீட்டை முடிக்க தி.மு.க. முடிவு செய்துள்ளது. ஏனென்றால், காங்கிரஸ் கட்சியில் தொகுதி பங்கீடு குறித்து பேச்சு வார்த்தை நடத்த கடந்த மாதமே குழு அமைக்கப்பட்டுள்ளது. அந்தக் குழுவினரும் ஏற்கனவே, முதல்–அமைச்சர் மு.க.ஸ்டாலினை சந்தித்து சென்றிருக்கிறார்கள்.

எனவே, காங்கிரஸ் கட்சியுடன் முதலில் தொகுதி பங்கீட்டை முடித்து, தொடர்ந்து மற்ற கட்சிகளுடன் பேச்சு வார்த்தையை தொடர தி.மு.க. திட்டமிட்டுள்ளது. ஏறக்குறைய, கடந்த முறை வழங்கப்பட்ட அதே தொகுதிகளே மீண்டும் ஒதுக்கப்படும் என தெரிகிறது.

**பிரமாண்ட பொதுக்கூட்டம்**

கூட்டணியில் இணைந்துள்ள புதிய கட்சிகளுக்கு அதில் ஏதாவது தொகுதிகளை ஒதுக்க வேண்டிய நிலை வந்தால், மாற்றிக் கொடுக்கவும் தி.மு.க. தலைமை முடிவு செய்துள்ளது. தேர்தல் தேதி அறிவிக்கப்படுவதற்குள் இந்தப் பணிகளை எல்லாம் வெற்றிகரமாக முடித்து, அதன்பிறகு பிரசாரப் பணிகளில் மும்முரமாக ஈடுபடவும் தி.மு.க. தலைமை திட்டமிட்டுள்ளது. காங்கிரஸ் கட்சியின் தேசிய தலைவர்கள் ஆன சோனியாகாந்தி, மல்லிகார்ஜூன கார்கே, ராகுல்காந்தி, பிரியங்கா காந்தி உள்பட கூட்டணி கட்சி தலைவர்களையும் அழைத்து பிரமாண்ட பொதுக்கூட்டத்தை நடத்த திட்டமிடப்பட்டுள்ளன. எந்தெந்த ஊர்களில் பொதுக்கூட்டத்தை நடத்தலாம் என்றும் பட்டியல் தயாரிக்கப்பட்டு வருகிறது.

# தெருநாய்கள் விவகாரம்: மாநில அரசுகளின் செயல்பாடுகள் மீது சுப்ரீம் கோர்ட்டு அதிருப்தி!

புதுடெல்லி, ஜன. 29–
தெருநாய்களை கட்டுப்படுத்தக்கோரிய வழக்கை விசாரித்து வரும் சுப்ரீம் கோர்ட்டு, மாநில அரசுகள் தெருநாய்களை கட்டுப்படுத்த கருத்தடை செய்வது போன்ற வழிகாட்டு நெறிமுறைகளை உருவாக்கியது.

இந்த வழிகாட்டு நெறிமுறைகளை கடைபிடித்து தெருநாய்களை கட்டுப்படுத்த எடுத்த நடவடிக்கைகளை மாநில அரசுகள் அறிக்கையாக தாக்கல் செய்ய உத்தரவிட்டது. ஆனாலும், பல மாநிலங்களின் தலைமை செயலாளர்கள் இதுதொடர்பான அறிக்கையை சுப்ரீம் கோர்ட்டில் தாக்கல் செய்யவில்லை.



இந்தநிலையில் அந்த வழக்கு நீதிபதிகள் விக்ரம் நாத், சந்தீப் மேத்தா, என்.வி.அஞ்சாரியா ஆகியோர் முன்னிலையில் மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது நீதிமன்றத்துக்கு உதவுவதற்காக நியமிக்கப்பட்ட வக்கீல்(அமீகஸ் கியூரி), 'சுப்ரீம் கோர்ட்டு விதித்த வழிகாட்டு நெறிமுறைகளின் படி தெரு நாய்களுக்கு கருத்தடை செய்வதை பல மாநிலங்கள் முறையாக பின்பற்றவில்லை' என தெரிவித்தார்.

இதற்கு நீதிபதிகள் கடும் அதிருப்தி தெரிவித்தனர். மேலும் நீதிபதிகள், மாநில அரசுகளின் அறிக்கையில் எந்த முழுமையான விவரமும் இல்லை. மாநில அரசுகள் தெளிவான அறிக்கையை தாக்கல் செய்வது இல்லை. கடமைக்காக அறிக்கையை தாக்கல் செய்கின்றனர். அசாம் தவிர வேறு எந்த மாநிலமும், சம்பந்தப்பட்ட மாநிலங்களில் எத்தனை தெருநாய் கடி சம்பவங்கள் நடந்துள்ளன என்பது குறித்த தரவுகளை வழங்கவில்லை. தெளிவில்லாத அறிக்கைகளை அளிக்கும் மாநிலங்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்' என தெரிவித்தனர். இதைத்தொடர்ந்து வாதாடிய அமீகஸ் கியூரி, 'தெருநாய்களுக்கு கருத்தடை செய்வதை அதிகரிக்க வேண்டும். தெருநாய்களுக்கு காப்பகங்கள் அமைக்கப்பட வேண்டும். சாலைகள் மற்றும் நெடுஞ்சாலைகளில் நாய்கள் மற்றும் கால்நடைகள் சுற்றித்திரிவதை கட்டுப்படுத்த கடுமையான உத்தரவுகளை பிறப்பிக்க வேண்டும்' என்றார்.

மேலும் அவர், இந்த விவகாரத்தில் பஞ்சாப், ராஜஸ்தான், தமிழ்நாடு, உத்தரபிரதேசம் மற்றும் தெலுங்கானா ஆகிய மாநிலங்கள் எடுத்த நடவடிக்கைகளை இன்று (வியாழக்கிழமை) தெரிவிப்பதாக கூறினார். இதைத்தொடர்ந்து, விசாரணை இன்றும் நடைபெற உள்ளது.

# UGC புதிய விதிகளுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வரவேற்பு!




சென்னை, ஜன. 29–
சாதி பாகுபாட்டை களைய பல்கலைக்கழக மானியக்குழு கொண்டு வந்துள்ள புதிய விதி களுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வரவேற்பு தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்தியில்,

சாதிய பாகுபாடுகளை களையும் வகையில் UGC கொண்டு வந்துள்ள புதிய விதிகள் தாமதமானது என்றாலும் வரவேற்கத்தக்கது. பா.ஜ.க. ஆட்சிக்கு வந்த பின்னர் உயர்கல்வி நிறுவனங்களில் குறிப்பாக SC, ST மாணவர்கள் தற்கொலை அதிகரித்து வருகின்றன. தென்னிந்தியா, காஷ்மீர் மற்றும் சிறுபான்மை சமூகங்களைச் சேர்ந்த மாணவர்களை குறிவைத்து மீண்டும் மீண்டும் தாக்குதல்கள் மற்றும் சித்ரவதைகள் நடந்துள்ளன. இந்த சூழலில், சமத்துவ பாதுகாப்புகள் என்பது தவிர்க்க முடியாத ஒன்று. மாணவர் இறப்புகளைத் தடுப்பது, பாகுபாட்டை முடிவுக்குக் கொண்டுவருவது மற்றும் பின்தங்கிய சமூ கங்களைச் சேர்ந்த மாண வர்களிடையே இடைநிற்றல் விகிதங்களைக் குறைப்பதில் மத்திய பாஜக அரசு தீவிரமாக இருந்தால், இந்த விதி முறைகள் வலுப்படுத்தப்படுவது மட்டுமல்லாமல், அவற்றின் கட்டமைப்பு இடைவெளிகளை நிவர்த்தி செய்யும் வகையில் திருத்தப்பட்டு, உண்மையான பொறுப்புணர்வுடன் செயல்படுத்தப்பட வேண்டும் என்று கூறியுள்ளார்.

# தமிழ்நாட்டில் 14 வயதுடைய 3,38,649 பெண் குழந்தைகளுக்கு கருப்பை வாய் புற்றுநோய் தடுப்பூசி போட இலக்குநிர்ணயம்!!

சென்னை , ஜன. 29–
கருப்பை வாய் புற்றுநோயை தடுத்திடும் வகையில், தடுப்பூசி மாநிலம் முழுவதும் 3,38,649 பெண் குழந்தைகளுக்கு செலுத்தப்பட உள்ளது. இந்தியாவில் ஆண்டுதோறும் சுமார் 1.2 இலட்சம் பெண்களுக்கு கருப்பைவாய் புற்றுநோய் புதிதாக கண்டறியப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் பெண்களை பாதிக்கும் புற்றுநோய்களில் மார்பக புற்றுநோய்க்கு அடுத்தபடியாக கருப்பைவாய் புற்றுநோய் கண்டறியப்பட்டு வருகிறது. ஹெச்.பி.வி வைரஸ் (HPV – Human Papilloma Virus) தொற்றின் காரணமாக ஏற்படும் கருப்பைவாய் புற்றுநோயை ஹெச்.பி.வி தடுப்பூசி செலுத்துவதன் மூலம் தடுக்க இயலும்.

கருப்பைவாய் புற்றுநோயை தடுக்கவும், தமிழ்நாட்டில் அந்நோயினை அறவே அகற்றிடவும் HPV தடுப்பூசியை 14 வயதுடைய அனைத்து பெண் குழந்தைகளுக்கும் படிப்படியாக வழங்க தமிழ்நாடு அரசு முடிவு செய்துள்ளது. இந்த தடுப்பூசி திட்டத்தினை தமிழ்நாட்டில் நடைமுறைப்படுத்த 14 வயதுடைய 3,38,649 பெண் குழந்தைகளுக்கு HPV தடுப்பூசி போட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. முதற்கட்டமாக கருப்பைவாய் புற்றுநோய் பாதிப்பு அதிகம் உள்ள தர்மபுரி, பெரம்பலூர், திருவண்ணாமலை மற்றும் அரியலூர் ஆகிய 4 மாவட்டங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அம்மாவட்டங்களில் உள்ள அரசு மற்றும் அரசு சார்ந்த பள்ளிகளில் 30,209 மாணவிகளுக்கு HPV தடுப்பூசி செலுத்தப்பட உள்ளது. அதன் தொடர்ச்சியாக, மாநிலம் முழுவதும் 3,38,649 பெண் குழந்தைகளுக்கு HPV தடுப்பூசி செலுத்தப்பட இருக்கிறது.

# ஐரோப்பிய நாடுகளுடன் ஒப்பந்தம்: திருப்பூர் ஆயத்த ஆடை வர்த்தகம் 2 மடங்கு அதிகரிக்க வாய்ப்பு!



திருப்பூர், ஜன. 29–
இந்தியா–ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுடன் வரியில்லா வர்த்தக ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது. இதன் மூலம் ஆயத்த ஆடைகளை இந்தியாவில் இருந்து குறிப்பாக திருப்பூரில் இருந்து வரியில்லாமல் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கு அனுப்பி வைக்க முடியும். இதனால் ஆயத்த ஆடைத்துறையினர் அதிக உற்சாகம் அடைந்துள்ளனர்.

இந்த ஒப்பந்தத்தை ஆயத்த ஆடை ஏற்றுமதி மேம்பாட்டு கவுன்சில் (ஏ.இ.பி.சி.) வரவேற்றும், பிரதமருக்கும், மத்திய வர்த்தக தொழில்துறை மந்திரிக்கும் நன்றியையும் தெரிவித்துள்ளது. இது உலகின் மிகப்பெரிய வர்த்தக கட்டமைப்புடன் இந்தியாவுக்கு நீண்டகால வணிக உறவை உருவாக்கும்.

இந்திய ஆடைத்துறைக்கு ஒரு மைல்கல்லாக அமையும். இந்த ஒப்பந்தம் அடுத்த 3 ஆண்டுகளில் இந்திய ஆயத்த ஆடை ஏற்றுமதியை இரட்டிப்பாக்கும். இந்தியாவில் ஆடைத்துறையில் புதிய முதலீடு மற்றும் வேலைவாய்ப்புகள் பெருகும். இதன் மூலம் ஆண்டுக்கு 20 முதல் 25 சதவீதம் ஆயத்த ஆடைத்துறை வளர்ச்சி பெறும்.

இந்திய ஆயத்த ஆடை ஏற்றுமதியில் ஐரோப்பிய ஒன்றியத்தின் பங்கு 28 சதவீதமாக உள்ளது. ஆனால் ஐரோப்பிய ஆடை சந்தையில் இந்தியாவின் பங்களிப்பு 2.9 சதவீதம் மட்டுமே. இந்த ஒப்பந்தம் மூலம் இந்திய ஆயத்த ஆடைத்துறை பெரிதும் பயன்பெறும் என்று ஏ.இ.பி.சி. தெரிவித்துள்ளது.

இதுகுறித்து திருப்பூர் ஏற்றுமதியாளர்கள் சங்கம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில்,

இந்தியா–ஐரோப்பிய கூட்டமைப்புகளுக்கிடையே வரியில்லா வர்த்தக ஒப்பந்தம், இன்னும் ஒரு வருட காலத்துக்குள் அமலுக்கு வர இருக்கிறது. இந்த ஒப்பந்தத்தின் மூலம் ஜவுளித்துறை அதிகம் பயன்பெறும். ஏற்கனவே திருப்பூரில் இருந்து ஆண்டுக்கு ரூ.25 ஆயிரம் கோடி வர்த்தகம் நடக்கிறது. இந்த ஒப்பந்தம் காரணமாக, ஐரோப்பிய நிறுவனங்கள் இந்தியாவை நோக்கி திரும்பும்போது வர்த்தக வாய்ப்புகள் பலமடங்கு பெருகும்.

அமெரிக்காவின் கூடுதல் வரி விதிப்பால் தற்காலிக பின்னடைவை சந்தித்த திருப்பூர், இந்த ஒப்பந்தம் காரணமாக நம்பிக்கை பெற்றுள்ளது. 2030–ம் ஆண்டுக்குள் திருப்பூரில் இருந்து ஐரோப்பிய நாடுகளுக்கான ஆயத்த ஆடை ஏற்றுமதி இருமடங்கு அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# மதில் மேல் பூனையாக இருந்து ஆளுங்கட்சி பக்கம் பாய்ந்தது: கூட்டணியை இறுதி செய்த தே.மு.தி.க..!

சென்னை, ஜன. 29–
தமிழகத்தில் அடுத்த 2 மாதங்களில் 17–வது சட்டசபை தேர்தல் நடைபெற இருக்கிறது. தற்போதைய அரசியல் சூழலில், 4 முனைப்போட்டி நிலவும் நிலை உள்ளது. ஆளுங்கட்சியான தி.மு.க. தலைமையில் ஒரு கூட்டணி, எதிர்க்கட்சியான அ.தி.மு.க. தலைமையில் மற்றொரு கூட்டணி, விஜய் தலைமையிலான தமிழக வெற்றிக் கழகம், சீமான் தலைமையிலான நாம் தமிழர் கட்சி ஆகியவை தனித்து போட்டியிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



**கூட்டணி பேச்சு வார்த்தை**

தே.மு.தி.க., ஓ.பன்னீர்செல்வம், பா.ம.க. (ராமதாஸ் அணி), புதிய தமிழகம் உள்ளிட்டவை இன்னும் கூட்டணியை முடிவு செய்து அறிவிக்கவில்லை. இதில், பிரேமலதா விஜயகாந்த் தலைமையில் இயங்கி வரும் தே.மு.தி.க., ஆளுங்கட்சியான தி.மு.க.வுடனும், எதிர்க்கட்சியான அ.தி.மு.க.வுடனும் ஒரே நேரத்தில் கூட்டணி பேச்சு வார்த்தையை நடத்தி வந்தது.

தொடக்கத்தில், 30 தொகுதிகள் என இரு கட்சிகளுடனும் தே.மு.தி.க. பேச்சு வார்த்தையை ஆரம்பித்தது. ஆனால், இரு கட்சிகளும் ஒற்றை இலக்க தொகுதிகளையே தே.மு.தி.க.விடம் முன்வைத்தன. பிரேமலதா விஜயகாந்தும் 15 தொகுதிகள் வரை இறங்கி வந்தார். அதற்கும் இரு கட்சிகளும் சம்மதிக்கவில்லை.

**தொண்டர்கள் ஆர்வம்**

இதனால், கூட்டணி பேச்சு வார்த்தை வேகத்தை தே.மு.தி.க. குறைத்தது. இந்த நேரத்தில்தான், அதாவது கடந்த 9–ந் தேதி கடலூரில் தே.மு.தி.க. மாநாடு நடைபெற்றது. ஏற்கனவே, இந்த மாநாட்டில் கூட்டணியை அறிவிப்பேன் என்று பிரேமலதா விஜயகாந்த் கூறியிருந்ததால், தொண்டர்களும் ஆர்வத்துடன் எதிர்பார்த்தனர்.

ஆனால், மாநாட்டில் பேசிய பிரேமலதா விஜயகாந்த், "கூட்டணியை முடிவு செய்துவிட்டோம். நாம் இருக்கும் கூட்டணிதான் வெற்றி பெறும். ஆளுங்கட்சியும், ஆண்ட கட்சியும் கூட்டணியை அறிவிக்காதபோது, நாம் மட்டும் ஏன் முன்கூட்டியே அறிவிக்க வேண்டும்" என்று எதிர்பார்ப்பை ஏற்படுத்தி, கூட்டணியை அறிவிக்காமல் சென்றுவிட்டார்.

**மதில் மேல் பூனை**

மாநாட்டில் பிரேமலதா விஜயகாந்த் அவ்வாறு பேசியிருந்தாலும், அப்போதுகூட தே.மு.தி.க. கூட்டணியை இறுதி செய்யாமலேயே இருந்து வந்தது. இப்படி, மதில் மேல் பூனையாக இருந்து வந்த தே.மு.தி.க. ஒரு வழியாக கூட்டணியை முடிவு செய்துவிட்டது.

ஆளுங்கட்சியான தி.மு.க.வுடன் முதல் முறையாக கைகோர்க்க இருக்கிறது.

2005–ம் ஆண்டு தொடங்கப்பட்ட தே.மு.தி.க., 2006–ம் ஆண்டு சட்டசபை தேர்தலில் இருந்து போட்டியிட்டு வருகிறது. 20 ஆண்டுகள் தேர்தல் களத்தில் இருந்தாலும், இதுவரை தி.மு.க.வுடன் கூட்டணி அமைத்தது இல்லை. வரும் தேர்தலில்தான் முதல் முறையாக கூட்டணி அமைக்கிறது.

**எத்தனை தொகுதிகள்?**

தி.மு.க. கூட்டணியில் தே.மு.தி.க.வுக்கு 6 சட்டசபை தொகுதிகளும், ஒரு ராஜ்யசபா சீட்டும் ஒதுக்கப்பட்டுள்ளதாக தெரிகிறது. குறிப்பாக, விருதுநகர் மாவட்டத்தில் ஒரு தொகுதியை குறிப்பிட்டு மகன் விஜய் பிரபாகரன் போட்டியிட பிரேமலதா விஜயகாந்த் கேட்டதாகவும், அதற்கு தி.மு.க. தலைமையும் பச்சைக்கொடி காட்டிவிட்டதாக கூறப்படுகிறது. அதாவது, சட்டசபை தேர்தலில் வெற்றி பெற்றால், விஜய் பிரபாகரன் எம்.எல்.ஏ.வாக தொடர்வார். தோல்வியடைந்தால் ராஜ்யசபாவுக்கு எம்.பி.யாக அனுப்ப திட்டம் இருக்கிறது. அவர் எம்.எல்.ஏ.வாகிவிட்டால், ராஜ்யசபா எம்.பி. பதவிக்கு பிரேமலதா விஜயகாந்தோ, அல்லது அவரது சகோதரர் எல்.கே.சுதீஷோ செல்ல வாய்ப்பு இருக்கிறது.

சாமி தரிசனம்

கூட்டணி இறுதியான நிலையில், நேற்று ஸ்ரீவில்லிபுத்தூர் சென்ற பிரேமலதா விஜயகாந்த், ஆண்டாள் கோவிலில் சாமி தரினம் செய்தார். 2011–ம் ஆண்டு சட்டசபை தேர்தலின்போது அ.தி.மு.க.வுடன் கூட்டணி இறுதியான போதும், விஜயகாந்த் ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் கோவிலுக்கு சென்று சாமி தரிசனம் செய்தார். விஜயகாந்தின் தாயார் பெயர் ஆண்டாள் என்பது குறிப்பிடத்தக்கது.

# NIA அதிரடி சோதனை - பாப்புலர் பிரண்ட் ஆதரவாளர்கள் வீடுகளில் இருந்து முக்கிய ஆவணங்கள் பறிமுதல், ஆவணங்கள் பறிமுதல்!

திருவனந்தபுரம், ஜன. 29–
இந்தியாவில் பல்வேறு பகுதிகளில் தீவிரவாத செயல்களில் பாப்புலர் பிரண்ட் ஆப் இந்தியா அமைப்பு ஈடுபட்டதாக புகார் கூறப்பட்டது இதனை தொடர்ந்து கடந்த 2022–ம் ஆண்டு, இந்திய அரசு பாப்புலர் பிரண்ட் ஆப் இந்தியா அமைப்பை சட்ட விரோத சங்கமாக அறிவித்து, உபா சட்டத்தின் கீழ் 5 ஆண்டுகளுக்கு தடை செய்தது. அந்த அமைப்பின் நிர்வாகிகள், ஆதரவாளர்கள் வீடுகளிலும் தேசிய புலனாய்வு முகமை அமைப்பினர் சோதனையில் ஈடுபட்டனர். தொடர்ந்து பாப்புலர் பிரண்ட் ஆப் இந்தியா ஆதரவாளர்கள், தேசிய புலனாய்வு முகமையினரால் கண்காணிக்கப்பட்டு வந்தனர். இந்த நிலையில் அந்த அமைப்பை சேர்ந்த 6 பேர் கேரளாவில் தலைமறைவாக இருப்பதாக என்.ஐ.ஏ.க்கு (தேசிய புலனாய்வு முகமை) ரகசிய தகவல் கிடைத்தது.




அதன் அடிப்படையில் கொச்சியை சேர்ந்த தேசிய புலனாய்வு முகமை அதிகாரிகள் கேரளாவில் திருவனந்தபுரம், எர்ணாகுளம், திருச்சூர் மற்றும் மலப்புரம் ஆகிய மாவட்டங்களில் திடீர் சோதனையில் ஈடுபட்டனர். நள்ளிரவு முதல் அதிகாலை வரை இந்த சோதனை நடைபெற்றது.

திருச்சூர் மாவட்டம் சாவக்காட்டில் எஸ்.டி.பி.ஐ. தலைவர் ஒருவரது வீட்டில் நடைபெற்ற சோதனையில், டிஜிட்டல் சாதனங்கள் மற்றும் வங்கி பதிவுகளை அதிகாரிகள் ஆய்வு செய்தனர். அந்த தலைவர், முன்பு பாப்புலர் பிரண்ட் ஆப் இந்தியாவின் மாவட்ட அளவிலான செயல்பாட்டாளராக பணிபுரிந்தவர் என கூறப்படுகிறது. மாநிலம் முழுவதும் நடைபெற்ற இந்த சோதனையில் குற்றவியல் பொருட்கள் கைப்பற்றப்பட்டதாக தெரிகிறது. இது தொடர்பாக மத்திய புலனாய்வு அமைப்பு வெளியிட்ட செய்திக்குறிப்பில், மாநிலம் முழுவதும் 9 இடங்களில் சோதனை நடத்தப்பட்டது. இதில் பல டிஜிட்டல் சாதனங்கள் மற்றும் ஆவணங்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

பாப்புலர் பிரண்ட் ஆப் இந்தியா மற்றும் துணை அமைப்புகளுடன் தொடர்புடைய இடங்களில் இருந்து இவை கைப்பற்றப்பட்டு உள்ளன என தெரிவித்து உள்ளது. தடைசெய்யப்பட்ட அமைப்பு அதன் வளாகங்கள், வசதிகள் மற்றும் உள்கட்டமைப்புகளைப் பயன்படுத்தி உடற்கல்வி, யோகா பயிற்சி மற்றும் அது போன்ற செயல்பாடுகள் என்ற போர்வையில் தேர்ந்தெடுக்கப்பட்ட போராளிகளுக்கு ஆயுதப் பயிற்சி அளித்ததாகவும் தேசிய புலனாய்வு முகமை தெரிவித்துள்ளது.

## தேவை

தமிழகத்தில் இயங்கி வரும் பிரபல தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழுக்கு, தமிழகம் முழுவதும் துடிப்பும், ஆர்வமும் மிக்க இளைஞர்கள் செய்திகள் சேகரிக்க மற்றும் புகைப்படம் எடுக்க தேவை.

தொடர்புக்கு:
செல் : 7904806432
போன்: 0452 – 4916699

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020